பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரேலால்ஜியால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

19] சென்னை—ஞாயிறு, ஆகஸ்ட் 18, *1946*. [ விலை. அணா. 2

## அவருடைய தலை சிறந்த பண்பு

மஹாதேவ் தேசாயினுடைய தலை சிறந்த பண்பு, சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் தம்முடைய சுய நலம் முழுவதையும் அறவே இல்லாமல் செய்து கொள்ளும் சக்தி உடைமையேயாகும்.

சேவா கிராமம் — 21-8-46 — மோ. க. காந்தி

## நித்திய ஜீவன் உடையவர்

மகாதேவ தேசாயின் 4-வது வருஷாப்திக தினத்தன்று அந்த அன்புமிகுந்த மேதாவியைப் பற்றி இன்பமான எண்ணங்களும் துன்பமான எண்ணங்களும் என்னுடைய இருதயத்தில் வந்து நிறைகின்றன. அவருடய நட்பைப் பெறுவது ஒரு பாக்கியம். தோழமையைப் பெறுவது ஒரு ஆநந்தம்.

25 வயதுதான். பேரும்புகழும் தேடும் பிராயம், ஆனால் மகாத்மாவின் மந்திர சக்தியில் விழுந்து விட்டார். அவர் தம்முடைய இளமை, இலட்சியங்கள், அபூர்வமான இலக்கிய ஆற்றல், பாண்டித்தியம், அசையாத தேசபக்தி, ஆகிய சாம்பிராணி கஸ்தூரிபோன்ற விலை யுயர்ந்த பொருள்களை யெல்லாம் கொண்டுவந்து குருவுக்குப் பாதபூஜை செய்ததை அறிவேன். 25 வருஷ காலம் இடைவிடாமல் எள்ளளவு குறைபாடுமின்றி குருசேவை செய்தார். அவர் பார்த்த வேலைகள் கணக்கில் அடங்கா.

என்னுடைய ஞாபகமாகிய திரையில் எத்தனையோ விஷயங்கள் தோன்றி மறைகின்றன. இதோ காந்தியடிகளின் ஆச்சிரமத்தின் முக்கியஸ்தராக காண்கின்றார். இவர்தான் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் விளங்கும் மகாதேவ். இவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டுதான் அவருடைய நுண்ணிய ஹாஸ்யத்தைப் பருகிக் கொண்டிருக்கிறார்கள். இதோ தோன்றும் மகாதேவ் தம்முடைய எண்ணங்களையும், தம்முடைய குருவினுடைய எண்ணங்களையும் அழகான மொழிகளில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இப்போது மகாதேவ் வெள்ளை ஷால் போர்த்திக் கொண்டு வைசிராய் மாளிகைப் படிகளில் அரசியல் தூதராக ஏறிக் கொண்டிருக்கிறார். அதோ மகாதேவ் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு காந்தியடிகளுடன் போய்க் கொண்டிருக்கிறார். இங்கே அவர் ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் புண்ய க்ஷேத்திர யாத்திரிகர்களாக வந்துள்ள அன்னிய நாட்டார்க்கு அழகாகவும், மரியாதையாகவும இந்தியாவின் பண்பாட்டையும் தமது குருவின் இதோபதேசத்தையும் தெள்ளத் தெளிய விளக்கிக் கொண்டிருக்கிறார்.

சகல ஞாபகங்களிலும் அதிகமாக இதயத்தை உருக்குவன அவருடைய பிரிவும் அதன் பின் நடந்த துக்ககரமான காட்சியுமே யாகும். தலைவர்களை ஆகஸ்ட் 9உ கைதி செய்து ஆகாகான் அரண்மனைக்குக் கொண்டு போனதுமுதல் அவர் ஏதோ அபாயம் வரப் போவதுபோன்ற அச்சத்தால் பீடிக்கப்பட்டவராகத் தோன்றினர். மகாத்மா மரணம் வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அடிக்கடி கூறி வந்தபடியே திடீரென்று நிகழ்ந்துவிடுமோ என்று எண்ணினர். ஆகஸ்ட் 14-ந் தேதி இரவு அரண்மனை முழுவதும் நிசப்தமாக இருந்த சமயத்தில் மகாதேவ என்னுடைய அறையில் உட்கார்ந்து ஏதோ சொற்ப நேரமே உள்ளது போலவும் அதற்குள் பேச வேண்டியதெல்லாம் பேசி முடித்துவிட வேண்டும் என்று எண்ணியது போலவும் வெகுநேரம் வரைப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் தம்முடைய வாழ்வைப்பற்றி எதுவும் மறைத்து வைத்துக் கொள்ளாமல் சுருக்கமாகச்சொல்லிக் கொண்டிருந்தார். தம்முடைய அருமை மனைவியாரைப் பற்றியும் மகனைப் பற்றியும் சொன்னர். ஆனல் அவர் பேசிய முக்கிய விஷயம் தம்முடைய இஷ்டதேவதையாகிய மகாத்மாவைப் பற்றியே தான். ஏதோ அந்த இரவு அபாயம் வரப் போவதாக எண்ணியதுபோல் காணப்பட்டார். ஆனல் மறுநாட் காலை அந்தச் சோர்வுக்குறி எதுவும் காணப்படவில்லை. வழக்கம் போல் உற்சாகமாகவே காணப்பட்டார். தோட்டத்தில் காந்தியடிகளுடன் உலாவிவிட்டு வந்ததும் "இன்று என் இவ்வளவு ஆனந்தம் எனக்கு என்று விளங்கவில்லை" என்று என்னிடம் கூறினர். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம், என்னுடைய அறைக்கு வந்து அவருக்காகக் காத்திருந்த டாக்டருடன் வேடிக்கையாகப் பேசினர். சில நிமிஷங்கள் செல்லவில்லை, அதற்குள் புன்னகை புரிந்து கொண்டே "என்னுடைய தலை சுழல்கின்றதே" என்று கூறினர். அவர் என்ன சொன்னர் என்று நாங்கள் உணர்வதற்கு முன்னதாகவே பிரிந்து போய் விட்டார். யார் அழைத்தும் எழுந்திருக்கவுமில்லை, ஏன் என்று கேட்கவுமில்லை.

அன்று துக்கசாகரத்தில் ஆழ்ந்து போயிருந்த குரு தமது அத்யந்த அன்புடைய சிஷ்யருக்குச் செய்த சரம கிரியைகளைப்பற்றி வர்ணிக்க என்னுடைய பேனாவுக்குச் சக்தி கிடையாது.

காந்தியடிகள் பிறர் உதவியின்றி தாமாகவே அந்தச் சலவைக்கல் போல் குளிர்ந்துபோன உடலைக் குளிப்பாட்டும் பொழுது அவருடைய கைகள் நடுங்கின. சந்தனம் பூசி புஷ்பங்களால் அலங்கரித்து வைத்துக் கொண்டு "மகாதேவ் இதை நீ எனக்குச் செய்வாய் என்று எண்ணினேன். இப்பொழுது நான் அதை உனக்குச்செய்ய வேண்டியவனாய் இருக்கிறேன்" என்று தழுதழுத்த குரலில் கூறினர். ஆகஸ்ட் 15-ம் தேதி மாலை மஞ்சள் வெயிலில் மகாதேவின் உடலை அரண்மனைத் தோட்டத்திலுள்ள ஒரு மூலையில் சுடுவதற்காக மிக்க துக்கத்துடன் கொண்டு போனோம். காலையில் ஜீவனுள்ள ஜோதியா யிருந்தது மாலையில் நீறுபூத்த நெருப்புக்குவியலாய் ஆகிவிட்டது.

மகாதேவ் மறைந்து விட்டாரா? சிறந்த தியாகத்தோடு சேவை செய்த தம்முடைய குருவின் இருத

யத்திலும் தேசத்தின் இருதயத்திலும் இப்பொழுதும் ஜீவித்துக் கொண்டிருக்கிறார் அல்லவா?

12-8-46 சரோஜனி நாயுடு.

## சரம ஸ்துதி

நம்முடைய அருமந்த மகாதேவ் தேசாய் பிரிந்து இப்பொழுது நான்கு வருஷங்கள் ஆகின்றன. ஆனாலும் இன்னும் அவருடைய பிரிவால் ஏற்பட்ட துக்கத்தையும் நஷ்டத்தையும் நம்மால் மறக்க முடியவில்லை. காந்தியடிகள் இன்று நம்முடைய வாழ்வில் ஒரு இன்றியமையாத அம்சமாக இருக்கிறார். அவருடைய முக்கியமான உறுப்பு ஊனமாய் விட்டது என்றே எண்ணுகிறோம். மகாதேவ் தேசாய் நம்மை விட்டுப் பிரிந்துபோன விஷயத்தை ஏதேனும் ஒன்று நமக்கு ஒவ்வொருநாளும் மௌனமாக ஞாபகப் படுத்திக்கொண்டே இருக்கிறது. சிலர் பிரிந்து போனால் அவர்களுக்கு ஈடுசெய்யக் கூடியவர்கள் கிடையார். அப்படிப் பட்டவர்களில் மகாதேவ் ஒருவர். சிலர் இறந்துபோனால் பிறர் செய்வதில் நம்முடைய மனமானது ஆழ்ந்துபோய் இறந்துபோனவர்களை மறந்துவிடுவோம். ஆனால் மகாதேவ், காந்தியடிகளுக்குப் பக்தி பூர்வமாகச் செய்த சேவையின் மூலமாகத் தேசத்திற்குச் செய்த சேவை வேறு எதனாலும் ஈடு செய்ய முடியாத விசேஷத் தன்மை வாய்ந்ததாகும்.

12-8-46 வி. ஆர்.

## கேள்வியும் பதிலும்

### சாரம்சத்தைக் கவனிக்கவில்லை

பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர் 28-7-46 ஹரிஜன் பத்திரிகையில் "சுதந்திரம்" என்னும் தலையங்கத்தைப் படித்துவிட்டு கீழ்க்கண்ட கேள்வியை அனுப்பி யிருக்கிறார். அவர் ராணுவத்தில் எஞ்சினியர் வேலை பார்க்கிறார். அமரிக்காவிலும் ஐரோப்பாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து உலக விஷயங்களை நன்றாக அறிந்திருக்கிறார். ஜெர்மனி தேசத்தில் யுத்தத்தால் ஏற்பட்ட கொடுமைகளை யெல்லாம் நேரில் பார்த்திருக்கிறார் :—

1. கேள்வி :—தாங்கள் கூறும் ராஜ்யம் லட்சிய ராஜ்யம்தான் என்பதில் சந்தேகமில்லை. அந்த லட்சிய ராஜ்யத்தில் வெளிநாட்டிலிருந்து படையெடுப்பு ஏற்படாது என்று எப்படி நிச்சயிக்க முடியும்? இந்த மெஷின் யுகத்தின் சிருஷ்டிகளான நவீன ஆயுதங்களையுடைய சேனை இல்லாதிருந்தால், அத்தகைய ஆயுதங்கள் உடைய அயல் நாட்டுச் சேனை படையெடுத்து வந்து ராஜ்யத்தை ஜெயித்து ஜனங்களை அடிமைப்படுத்தி விடலாமல்லவா?

பதில் :—கேள்வி கேட்பவர் என்னுடைய கட்டுரையைப் பலமுறை கவனமாகப் படித்ததாகவும் அது அவருக்கு நிரம்பப் பிடித்திருப்பதாகவும் கூறுகிறார். ஆயினும் அவர் இராணுவத்தைச் சேர்ந்தவராய் இருப்பதால் என்னுடைய கட்டுரையின் சாராம்சத்தை அறிந்துகொள்ள வில்லை. அந்தச் சாராம்சம் யாதெனில், எப்படித் தனி மனிதர் ஒருவர் மனவுறுதி யுடையவராக இருந்தால் உலக முழுவதும் எதிர்த்து வந்தாலும் தம்முடைய மானத்தையும் மரியாதையையும் காப்பாற்றிக்கொள்ள முடியுமோ அப்படியே ஒரு தேசமோ, சமூகமோ எவ்வளவு சிறியதாக இருந்தபோதிலும் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதே யாகும். அப்படிக் காப்பாற்றிக் கொள்வதுதான் ஆயுதமில்லாதவர்களுடைய இணையற்ற ஆற்றலும் அழகுமாகும். அத்தகைய அஹிம்சா பூர்வமான தற்காப்பு முறையானது எந்தக் கட்டத்திலும் தோல்வியை அறியவும் செய்யாது, தோற்று விட்டதாக ஏற்றுக்கொள்ளவும் செய்யாது. ஆகலால் அஹிம்சா முறையையே தன்னுடைய இறுதிக்கொள்கையாக ஏற்றுக்கொள்ளும் எந்த தேசத்தையும் சமூகத்தையும் அணுக்குண்டு கூட அடிமைப்படுத்த முடியாது.

## உணவுப் பஞ்சம் ஏன்?

2. கேள்வி :—இந்தியா தற்சமயம் தனக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறது. அயல் நாட்டிலிருந்து தருவிக்க வேண்டுமானால் அதற்குப் பணம் கொடுக்கும் பொருட்டு இந்தியா மற்றப் பொருள்களை விற்றாக வேண்டுமே, அப்படி விற்க வேண்டுமானால் அது அந்தப் பொருள்களை அதிகமாக உண்டாக்க வேண்டும். நவீன மெஷின்களில்லாமல் அப்படி உண்டாக்க முடியாது. கையால் வேலை செய்வதை விட்டு விட்டு மெஷினால் வேலை செய்ய ஆரம்பித்தாலொழிய இது எப்படிச் சாத்தியமாகும்.

பதில் :—இந்தக் கேள்வியின் முதல் வாக்கியத்தில் கூறியிருக்கும் விஷயம் முற்றும் தவறாகும். பலர் பலவிதமாகக் கூறியபோதிலும் இந்தியா இப்பொழுதும் போதுமான உணவை உண்டாக்க முடியும் என்றே நான் எண்ணுகின்றேன். போதுமான உணவை உண்டாக்க வேண்டுமானால் என்ன செய்தாக வேண்டும் என்பதைக் குறித்து இதற்கு முன்னதாகவே எழுதி யிருக்கின்றேன். மத்திய அரசாங்கம் தேசீய அரசாங்கமாகவும், கள்ள விற்பனை செய்வோரையும் கொள்ளை லாப மடைவோரையும் உடம்பின் சோம்பேறித் தனத்தையும் மனத்தின் சோம்பேரித் தனத்தையும் கடுமையாகத் தண்டிக்கக் கூடிய அரசாங்கமாகவும் இருத்தல் வேண்டும்.

கேள்வியின் முதல் பாகத்துக்கு நான் கூறியுள்ள பதில் சரியாக இருக்குமானால் கேள்வியின் இரண்டாவது பாகத்துக்குப் பதில் கூறவேண்டிய அவசியமே யில்லை. ஆயினும் இந்த நாட்டில் கையினால் வேலை செய்வதற்கு ஏராளமான ஜனங்கள் இருந்துகொண்டிருக்கும்பொழுது, அதை விட்டு விட்டு நவீன மெஷின்களைக் கைக் கொள்ள வேண்டும் என்று கூறுவது சரியன்று. வேலை செய்யக் கூடிய பலமுடையவர்கள் அனைவரும் ஒரே மனத்துடனும் உற்சாகத்துடனும் வேலை செய்தால், நவீன மெஷின்களையுடைய எந்தத் தேசத்தோடும் வெற்றிகரமாகப் போட்டி யிட முடியும் என்று நான் துணிந்து கூறுகின்றேன். நவீன மெஷின்களுடைய தேசங்கள் அவைகள் இல்லாத காரணத்தால் பலவீனமுடையதாகக் கூறப் பெறும் இதர தேசங்களைக் கெடுத்தே வாழ்ந்து வருவதைக் கேள்வி கேட்பவர் மறந்துவிடலாகாது. "பலவீன முடையதாகக் கூறப்பெறும்" என்ற சொற்றொடரை நான் உபயோகிப்பதன் காரணம் யாதெனில் எத்தனை நவீன மெஷின்களும் ஆயுதங்களும் வைத்திருந்தபோதிலும் அவைகளையுடைய தேசங்களை விடத் தாங்களே பலமுடையவர் என்று எந்த நிமிஷம் நவீன மெஷின்களில்லாத தேசங்கள் உணர்ந்து கொள்ளுமோ, அந்த நிமிஷம் முதல் அவை பலவீனமுடையதாக இருக்கவும் பலவீன முடையதாகக் கூறப்படவும் சம்மதிக்க மாட்டா என்பதே யாகும்.

## நூற்பதின்மூலம் சுயராஜ்யம்

காங்கிரஸ்காரர் ஒருவர் எழுதுகிறார் :—

"ஏராளமாகப் பிரசாரம் செய்து வந்திருந்தும் இன்னும் நூல் நூற்றலும் நெசவு செய்தலும் எதிர்பார்த்த அளவுக்கு நாட்டில் பரவவில்லை என்

பதைத் தாங்கள் ஒப்புக்கொள்வீர்கள். ஒவ்வொரு காங்கிரஸ் கமிட்டியும்—பெரிய நகரங்களிலுள்ள கமிட்டிகளாவது—ஜனங்களுக்கு நூற்கவும் நெய்யவும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தால் அதிகமான நன்மை யுண்டாகும். அநேக ஜனங்கள்—முக்கியமாக ஏழைகள் நூற்க முன்வராததற்குக் காரணம் அவர்களுக்கு எந்தவிதமான ராட்டினங்கள் நல்லவை, அதிகமான நூல் தரும், அவைகளை எப்படி உபயோகிக்கவேண்டும், உற்பத்தியாகும் நூலை என்ன செய்யலாம், இவைபோன்ற விஷயங்கள் தெரியாதிருப்பதுதான். ஆதலால் வாரத்தில் ஒன்றிரண்டுமுறை இந்த விஷயங்களைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தால் நலமாயிருக்கும். காங்கிரஸ் கமிட்டிகள் இப்படிச் செய்து பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஒழுங்காக வகுப்புக்கள் ஏற்படுத்தாவிட்டாலும், நிபுணர்கள் நகரத்தின் பல பகுதிகளுக்கும் சென்று ஜனங்களுக்கு இந்த விஷயங்களைப் போதித்து வந்தால் எவ்வளவோ பிரயோஜனமாய் இருக்கும்.''

பதில் :—இத்தகைய கேள்விகள் அடிக்கடி என்னிடம் காங்கிரஸ்காரர்களிடமிருந்து வந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கேள்வியில் சகல விஷயங்களும் அடங்கியிருப்பதால் இதை மட்டுமே இங்கு தருகின்றேன். கையெழுத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் இந்தக் கேள்வியைக் கேட்பவர் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று என்னால் சொல்லமுடியவில்லை. ஹிந்துஸ்தானியில் எழுதியிருந்தால் பொருத்தமாயிருக்கும். காங்கிரஸ் ரிஜிஸ்தரில் காங்கிரஸ் மெம்பராகப் பதிவு செய்யாமலே, பதிவு செய்த காங்கிரஸ் மெம்பர்களைவிடச் சிறந்த காங்கிரஸ்காரர்களாகவுள்ள ஏராளமான ஜனங்களுக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாது. காங்கிரஸ் மெம்பர்களாயிருப்போரில் அநேகர் காங்கிரஸ் மெம்பர்களாயிருப்பதில் அக்கரையுடையவரா யிருப்பதைவிடக் குறைவாகவே நூல் நூற்பதில் அக்கரையுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படி அவர்கள் காங்கிரஸ் மெம்பராயிருப்பதில் அதிக அக்கரையுடைவர்களா யிருப்பதற்குரிய காரணங்களை அவர்கள் அறிவார்கள், அவற்றை நான் இங்கு குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. ஆயினும் இந்த நிருபர் கூறுவது கவனிக்கவேண்டிய விஷயமேயாகும். காங்கிரஸ் கமிட்டிகள் எல்லாம் நூற்றல் நெய்தல் சம்பந்தமான சகல விஷயங்களையும் கற்றுக் கொடுக்கும் ஸ்தாபனங்களாக ஆகிவிடுமானால், கிராமங்களின் நிலைமை அடியோடு மாறிவிடும் என்பதிலும் பாமர ஜனங்களின் முயற்சியால் சுயராஜ்யம் சித்தித்துவிடும் என்பதிலும் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. எப்படிப் பாமர ஜனங்களுடைய முயற்சி சுயராஜ்யத்தை உண்டாக்கிவிடும் என்பதைக் குறித்து நான் இந்தப் பத்திரிகையில் எழுதியிருக்கின்றேன். நிருபர் கூறும் விஷயத்தை வற்புறுத்தவே இதை எழுதுகின்றேன்.

சேவாகிராமம், — 8-8-46 — மோ. க. காந்தி.

## மறுபடியும் ராம நாமம்

ஒரு நண்பர் தமக்கு வந்த கடிதமொன்றை எனக்கு அனுப்பிப் பதிலனுப்புமாறு கேட்கிறார். கடிதம் நீளமாயிருப்பதால் சாரமான பாகத்தைமட்டும் இங்கே தருகிறேன் :—

"காந்தியடிகளின் இரத்தம் இந்திய இரத்தம். அப்படியிருக்க அவர் ஏன் தினந்தோறும் பிரார்த்தனைக் கூட்டங்கள் கூட்டி ஹிந்துக் கடவுளின் இராமநாமத்தை பஜனை செய்யச் சொல்லிப் பிறமதங்களைச் சார்ந்த தம்முடைய நாட்டு மக்களுடைய மனத்தைப் புண்படுத்த வேண்டும்? இந்தியாவில் பல விதமான மதங்கள் இருப்பதையும், ஹிந்துக்கடவுள் பேரால் அவர் பகிரங்கமாகப் பிரார்த்தனைகளை நடத்திக்கொண்டு போனால் மற்ற மதத்தார்கள் அவருடைய கருத்தைத் தவறாக அர்த்தப் படுத்திக் கொள்வார்கள் என்பதையும் அவர் மறந்து விடலாகாது. முஸ்லிம்லீக் கூறும் குறைகளில் இதுவும் ஒன்றாகும். அவர் இராம ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று அடிக்கடி கூறி வருகின்றார். மதப் பற்றுடைய முஸ்லீம்கள் இதைப்பற்றி என்ன எண்ணமாட்டார்கள் ?''

இராமநாமம் கடவுளுக்குரிய பல நாமங்களில் ஒன்று என்று ஆயிரம்தரம் நான் திரும்பத் திரும்பக் கூறியாய் விட்டது. பிரார்த்தனைக் கூட்டங்களில் ராமநாம பஜனை நடப்பது போலவே குரானிலிருந்தும் ஜெண்ட் அவஸ்தாவிலிருந்தும் வேதபாராயணம் நடைபெறுகின்றது. மதப் பற்றுடைய முஸ்லிம்கள் மதப்பற்றுடையவர்களா யிருக்கும் காரணத்தினாலேயே ராமநாம பஜனை செய்யக்கூடாது என்று இதுவரை ஆட்சேபித்ததில்லை. இராமநாம மென்பது வாயால் மட்டும் பஜிக்கும் பஜனை அன்று. கோடிக் கணக்கான இந்துக்கள் சர்வ வியாபியான கடவுளுக்கு ராமநாமத்தைச் சூட்டி யிருக்கிறார்கள். ராமநாமத்தில் நாமம் என்னும் பகுதிதான் அர்த்தபுஷ்டியுள்ள பகுதியாகும். ராமநாமத்தில் காணப்படும் ராமன் சரித்திரத்தில் காணப்படும் ராமன் அல்லன். அது எதுவானாலும் சரி. என்னுடைய மதத்தை நான் பகிரங்கமாகச் சொன்னால் ஏன் பிறருடைய மனம் புண்படவேண்டும்? யாரும் இந்தப் பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. கலந்துகொள்பவர்கள் இராமநாம பஜனை செய்யவேண்டு மென்ற நிர்ப்பந்தமும் கிடையாது. அவர்கள் செய்யவேண்டிய தெல்லாம் கூட்டத்தின் அமைதியைக் குலையாதிருப்பதும் நடப்பவற்றில் அனுதாபம் இல்லாவிட்டாலும் சகித்துக் கொண்டிருப்பதும்தான்.

இராம ராஜ்யம் என்னும் சொற்றொடரை நான் பல முறை விளக்கிவிட்டேன். அப்படி யிருக்க அது புண்படுத்துவதாக ஏன் சொல்லவேண்டும்? அது விஷயத்தை நன்றாகக் குறிப்பிடுகின்றது. அதன் பொருளை வேறு எந்த விதத்திலும் நாட்டிலுள்ள கோடானுகோடி மக்களுக்கு விளக்கிச் சொல்ல முடியாது. ராம ராஜ்யம் குறிக்கும் விஷயத்தை முஸ்லீம்களிடத்தில் குதாய் ராஜ்யம் என்றும் கிறிஸ்தவர்களிடத்தில் கர்த்தருடைய ராஜ்யம் என்றும் கூறுவேன். வேறு விதமாகக் கூறுவது உண்மையைமறைப்பதும் பொய்வேஷம்போடுவதுமாகும்.

சேவா கிராமம், — 8-8-46. — மோ. க. காந்தி

## கோவா

கோவா அதிகாரிகள் கோவா ஜனங்களைப் பேசவொட்டாமல் வாயடைக்கும் 'மனிதப்பண்பு மிகுந்த' காரியங்களை மிகச் சந்தோஷமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கடைசியாகச் செய்துள்ள காரியம் திரு. பிரகன்ஸா கூன்கா என்பவரை ராணுவ விசாரணை செய்து எட்டு வருஷ தண்டனை விதித்து ஆப்பிரிக்காவிலுள்ள போர்த்துக்கேசிய குடியேற்ற நாட்டுக்கு அனுப்பி யிருப்பதுதான். திரு. பிரகன்ஸா செய்த குற்றமெல்லாம் பிரஜா உரிமையை உபயோகிக்கத் துணிந்த குற்றமொன்றேயாகும். இந்தியாவிலுள்ள பிரெஞ்சு ஸ்தலங்களின் கவர்னர் அங்குள்ள ஜனங்களைப் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஜனங்களுடன் ஒத்துழைக்குமாறு கூறி வருகிறார். ஆனால் கோவா அதிகாரிகளோ இந்த யோசனைக்கு மாறாக நடந்து வருகிறார்கள். அதனால் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் அவர்களுடைய நடைமுறையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி யிருப்பது சரியானதாகும்.

சேவா கிராமம், — 12-8-46. — மோ. க. காந்தி

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு : ... பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஆகஸ்ட் 18 ஞாயிறு 1946


## மஹாதேவ தேசாய்

அரிய நண்பராயும் தோழராயும் இருந்த ஒருவரைப் பற்றி எழுதுவது கஷ்டமான காரியம். அவருடன் பழகிய சந்தர்ப்பங்களைப்பற்றி எத்தனையோ விஷயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. மனக்கண் முன்னால் ஊர்வலம் போல் செல்லுகின்றன.

நாம் அனேக விஷயங்களை ஆராயவேண்டிய அவசியம் இல்லாமலே நம்முடைய வாழ்வின் இன்றியமையாத அம்சங்களாக ஏற்றுக்கொள்கிறோம். அதுபோல் மஹாதேவ் நம்மில் பலருக்கு ஒரு ஸ்தாபனம் போல் ஆகி விட்டார். சாந்தமானவர், திறமை வாய்ந்தவர். சதா காலமும் உழைப்பவர். தன்னலத்தை மறந்தவர். பரிபூரணமாக அர்ப்பணம் செய்தவர். அவரை அறிய அறிய அவரிடத்தில் அன்பும் மதிப்பும் அதிகரித்துக் கொண்டே போகும். 25 வருஷ காலம் ஒன்றாய்ப் பழகினோம். ஒரே லட்சியத்துக்காக உழைத்தோம். எதைச் செய்தாலும் அவர் திறமையாகவும் சரியாகவும் செய்வார். அவர் பெரிய பண்டிதர். ஆனாலும் மனிதப் பண்புடையவர். அதனால், அவரிடத்தில் எங்களுக்கு உண்டாயிருந்த அன்பும் மதிப்பும் வளர்ந்து கொண்டே வந்தன. அவர் திடீரென்று பிரிந்து போனதும் என்ன செய்வதென்ற திகைப்பு உண்டாயிற்று. எங்களுடைய வாழ்விலும் வேலையிலும் இன்றியமையாத அம்சமாக இருந்த ஒருவர் மறைந்து விட்டார். எங்கள் பிரியமான தோழர் போய் விட்டார். இந்த நஷ்டத்தை ஈடு செய்யக் கூடியவர் யாரும் இலர்.

ஆயினும் அவரைப்பற்றிய ஞாபகம் அழியாது. நமக்குக் கஷ்டமுண்டாகும் காலங்களிலெல்லாம் தைரியம் கொடுத்து உற்சாகப்படுத்தும். இனி வருங்காலத்தில் அதிகமான கஷ்டங்கள் ஏற்படும். அந்தச் சமயத்தில் நமக்கு அறிவு நிறைந்த புத்திமதி சொல்லக்கூடிய மகாதேவ் இன்று நம்முடன் இல்லாமல் போய் விட்டாரே என்று மிகுந்த துக்கமாய் இருக்கிறது.

வார்தா — 10-8-46 — ஜவஹர்லால் நேரு

## கடவுள் ஆளா, சக்தியா ?

ஒரு நண்பர் பரோடாவிலிருந்து ஆங்கிலத்தில் கீழ்கண்டவாறு எழுதுகிறார் :—

“தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்க்கு அறிவும், இந்தியருக்கு இறுதிவரைப் போராடும்படியான மனஉறுதியும், தைரியமும் அருளுமாறு கடவுளைப் பிரார்த்திக்குமாறு கூறுகிறீர்கள். இந்த மாதிரியான பிரார்த்தனையை ஒரு ஆளிடந்தானே செய்து கொள்ள முடியும்? கடவுள் சகலவல்லமையும் சர்வ வியாபகமும் உடையவராக இருந்தால், அவருக்குப் பிரார்த்தனை செய்வதால் என்ன லாபம்? என்ன நேர்ந்தால் என்ன, அவர் கவனிக்கப் போகிறாரா?”

இந்த விஷயத்தைக் குறித்து இதற்கு முன்பும் எழுதியிருக்கிறேன். ஆயினும் இந்தக் கேள்வி மறுபடியும் மறுபடியும் பல பாஷைகளில் எழுந்து கொண்டிருப்பதால், நான் மறுபடியும் விளக்கிச் சொன்னால் யாருக்கேனும் பயன்படும் என்று நம்புகிறேன். உலகத்தில் சகல சக்திகளிலும் எது உயர்ந்ததோ அந்த அழிக்க முடியாத சக்திக்குப் பெயரிட முயன்றுதான் மனிதன் ராமன் என்றும், ரஹ்மான் என்றும், அஹுர்பஜ்தா என்றும், கிருஷ்ணன் என்றும் கர்த்தர் என்றும் அழைக்கின்றான். பரிபூரணமில்லாதவனாயிருந்தபோதிலும் இடைவிடாமல் பரிபூரணத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பாகும். அந்த முயற்சியில் அவன் தியானத்தில் ஆழ்ந்து விடுகிறான். எப்படிக் குழந்தை விழுந்து விழுந்தே நடக்கக் கற்றுக் கொள்கிறதோ அப்படியேதான் மனிதனும் எவ்வளவு அறிவுடையவனாக இருந்தபோதிலும் எல்லையற்ற பரம் பொருளுடன் ஒப்பிடும்போது ஒரு சிறு சிசுவாகவே தோன்றுகிறான். நான் மிகைப்படுத்திக் கூறுவதுபோல் தோன்றலாம். ஆனால் அப்படியன்று. அது முற்றிலும் உண்மையேயாகும். மனிதன் தன்னுடைய குறைபாடுள்ள மொழியினாலேயே கடவுளை வர்ணிக்க முடியும். ஆனால் கடவுள் என்னும் சக்தி வர்ணனைக்குள் அடங்காத ஒன்றாகும். மனிதன் வர்ணிக்க வேண்டிய அவசியமும் அதற்குக் கிடையாது. சமுத்திரத்திலும் விசாலமான அந்தச் சக்தியை வர்ணிக்க மனிதன்தான் சாதனங்களைத் தேடுகிறான். இந்த உண்மையை ஏற்றுக்கொண்டால், ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கேட்க வேண்டிய அவசியமே ஏற்படாது. மனிதன் தன்னுடைய சிற்றறிவிற்கு ஏற்பவே கடவுளைச் சிந்திக்க முடியும். கடவுள் சமுத்திரம்போல் விசாலமாயும் எல்லையற்றுமிருந்தால், ஒரு சிறு துரும்பு போன்ற மனிதன் எவ்வாறு கடவுளைக் கற்பனை செய்துகொள்ள முடியும்? கடலுக்குள் விழுந்து அமிழ்ந்தால்தான் கடவுளைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட அனுபவத்தை வாயால் கூற முடியாது. மனிதன் பிரார்த்தனை செய்யும்பொழுது தன்னுடைய உயர்ந்த அம்சத்தையே வணங்குகின்றான் என்று பிளாவட்ஸ்கி அம்மையார் கூறியது உண்மையேயாகும். கடவுள் அகத்திலிருப்பதாக உணர்ந்தவர்தான் உண்மையாகப் பிரார்த்தனை செய்ய முடியும். அப்படி உணராதவர் பிரார்த்தனை செய்ய வேண்டியதில்லை. செய்யாததால் கடவுள் வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டார். ஆயினும் பிரார்த்தனை செய்யாதவர் நஷ்டம் அடைபவரே என்று நான் என் அனுபவத்திலிருந்து கூற முடியும். கடவுளை ஆளாக எண்ணிப் பிரார்த்தனை செய்தாலும் சக்தியாக எண்ணிப் பிரார்த்தனை செய்தாலும் ஒன்றுதான். பிரார்த்தனை செய்வதற்கு எது முற்றிலும் சரியான முறை என்பது யாருக்கும் தெரியாது. யாருக்கும் தெரியப்போவதுமில்லை. இலட்சியம் எப்போதும் இலட்சியமாகவே இருக்கும். சகல சக்திகளுக்கும் அஸ்திவாரமான சக்தியே கடவுள் என்பதை மட்டும் நாம் மறந்து விடலாகாது. மற்றச் சக்திகள் எல்லாம் உலகாயத சக்திகள். கடவுளோ— அதுதான் ஜீவசக்தி. சர்வ வியாபகமானது. அதனால் யாராலும் அறிய முடியாதது.

சேவா கிராமம் — 9-8-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## தென் ஆப்பிரிக்கா

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் நடத்தி வரும் வீரப் போராட்டம் கொஞ்சமும் குறையாமல் உற்சாகமாகவே நடந்துவருகிறது. நீண்டகாலம் நடக்கும் என்று தோன்றுகிறது. எதிர்ப்பவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான காலம் துன்பத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுடைய வெற்றியும் கீர்த்தியும் அதிகரித்துக் கொண்டே போகும். நீண்ட நாள் துன்பம் ஏற்றுக் கொள்ளும் பொழுதெல்லாம் இந்த விதமாகவே நடைபெறும். தென்னாப்பிரிக்கா சர்க்கார் வேண்டுமென்றுதெரிந்தே செய்யும் காரியமாதலால் இந்திய ஆண்களும் பெண்களும் எவ்வளவு வீரத்துடன் துன்

பங்களை ஏற்றுக்கொண்டாலுங்கூட திடீரென்று மாற்றிவிட முடியாது. இதை நான் அந்தப் போர் வீரர்களுடைய உத்ஸாகத்தைக் குறைப்பதற்காகக் கூறவில்லை. அதிகமான துன்பத்தை நீண்ட நாள் அனுபவிக்கத் தயாராகயிருக்க வேண்டுமென்று உத்ஸாகப்படுத்துவதற்காகவே கூறுகிறேன். அவர்களுடைய பிரதிநிதிகள் இங்கே என்னைப் பார்க்க வந்திருந்தபொழுது நான் அவர்களிடம் அவர்களுடைய போராட்டம் சீக்கிரத்தில் வெற்றி அடைந்து விடாது என்பதை வெகு தெளிவாக விளக்கிச் சொன்னேன். நீண்ட நாள் துன்பம் அனுபவிக்க நேருவது துன்பம் அனுபவிப்பவர்களுக்கு நன்மையே செய்யும். அதற்குக் காரணம் யாதெனில் கொடுங்கோன்மை தொடர்ந்து நடந்தால் அதைஜனங்கள் நாளுக்குநாள் அதிகமாக வெறுப்பார்கள் என்பதே. உண்மையில் கொடுங்கோன்மை ஒரு நாளும் நீண்ட நாள் உயிரோடிருக்க முடியாது. போராட்டத்தின் முடிவில் வெற்றி நிச்சயம். ஆதலால் துன்பத்தை அனுபவிப்பவர்கள் போராட்டம் நீண்ட நாள் நடக்குமா சீக்கிரத்தில் முடியுமா என்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை.

சேவா கிராமம், — 12-8-46 — மோ. கா. காந்தி.

## கடவுளைப்பற்றிச் சிந்திப்பதெப்படி ?

ஒரு நிருபர் எழுதுகிறார் .—

" பிரார்த்தனை நடக்கும் சமயத்தில் கண்களை மூடிக் கொண்டுக் கடவுளைத் தவிர வேறு எதையும் சிந்திக்கக்கூடாதென்று கூறுகிறீர்கள். கடவுளை எப்படி, எந்த உருவத்தில் சிந்திக்க வேண்டும் ?"

எதனிடம் பக்தி செலுத்துகிறோமோ அதைத் தவிர வேறு எதையும் மனத்தால் பார்க்கவோ கேட்கவோ முடியாதபடி மனத்தின் கண்களையும் காதுகளையும் மூடிக்கொள்வதே உண்மையான தியானம் ஆகும். ஆதலால் பிரார்த்தனை சமயத்தில் கண்களை மூடிக்கொள்வது அப்படி லட்சியத்தினிடத்தில் சிந்தனையைக் குவித்து வைப்பதற்கான ஒரு உதவியாகும்.

மனிதன் சிற்றறிவு உடையவனாதலால் கடவுளைப் பரிபூரணமாகச் சிந்தித்துவிட முடியாது. ஆதலால் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்த சிறந்த முறையில் சிந்திக்கலாம். சிந்தனை மட்டும் உள்ளத்தைத் தூய்மை செய்வதாகவும் உயர்த்துவதாகவு மிருக்க வேண்டும்.

சேவா கிராமம் — 10-8-46 — மோ. க. காந்தி

## குதிரைப் பந்தயம்

குதிரைப் பந்தயத்தால் பணமும் மக்களும் நாசமாவதைக் குறித்து நான் இதற்குமுன் பலமுறை எழுதியிருக்கிறேன். இப்பொழுது ஒரு நண்பர் குதிரைப் பந்தயச் சூதாட்டம் குடிப் பழக்கத்தை விடக் குறைந்த தீமையன்று என்று கடுமையான பதங்களை உபயோகித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதனால் இந்த விஷயத்தைக் குறித்து இப்பொழுது மறுபடியும் எழுதுகிறேன்.

அந்த நிருபர் மேலும் கூறுவதாவது :—

" குதிரைப் பந்தயத்திற்காக ஸ்பெஷல் ட்ரெயின் விடுகிறார்கள். காந்தித் தொப்பி வைத்துக் கொண்டு காங்கிரஸ்காரர் என்று சொல்லிக் கொள்பவர்களும் அங்கே போய்ப் பணத்தைப் பாழாக்குகிறார்கள். இந்தப் பணம் எல்லாம் எங்கிருந்து வருகிறது ? இப்பொழுது பொதுஜன ஆதரவுள்ள மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களும் கூட இந்தத் தீமையை ஒழிக்காமல் சும்மா பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்."

குதிரைப் பந்தயச் சூதாட்டம் மதுபானத்தைப் போன்ற தீமையுடையதாக நான் கருதவில்லை. ஆயினும் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியன்று. குறைந்த தீமை என்பதால் சூதாட்டம் நல்லதாக ஆகிவிடாது. குதிரைப் பந்தயத்தின் நுணுக்கங்களை எல்லாம் நான் அறியேன். நான் சொல்லக்கூடியதெல்லாம் இந்தத் தீமையை ஒழித்துவிடப் பொதுஜன சர்க்காருக்கு அதிகாரம் இருக்குமானால், அவர்கள் நிச்சயம் அப்படிச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

சேவாகிராமம், — 9-8-46 — மோ. க. காந்தி.

## ஒரு கதர் பக்தருடைய முறையீடு

தென்னிந்தியாவில் வசித்து வரும் ஒரு குஜராத்திக் கதர் பக்தர் கீழ்கண்டவாறு எழுதுகிறார் :—

" இங்கே கதர் பந்தரில் பருத்தி கதிர் ராட்டினம் முதலியவைகள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. நான் இதுவரை என்னுடைய சொந்தப் பருத்தியைக் கொண்டு நூற்று வந்தேன. இங்கே வாங்கும் பஞ்சுத் திரிகள் கொஞ்சமும் நல்லதாயில்லை. அவைகளை வாங்கிய பிற்பாடே அவைகள் நன்றாயில்லை என்று அறிந்தேன். இங்கு கிடைக்கும் பருத்தியைக் கையால் கொட்டுவதும் கஷ்டமாயிருக்கிறது. அதைக் கற்றுக் கொடுப்பதற்கு ஆளும் கிடைக்கவில்லை.

1946ம் வருஷத்துக்குக் கொடுக்கவேண்டிய நூல் முழுவதையும் நானே பஞ்சு கொட்டி நூல் நூற்றுக் கொடுத்துவிட்டேன் முதலில், தானே நூற்ற நூலுக்குக் கூப்பன்கள் கொடுத்தார்கள். அதைக் கொண்டு குறிப்பிட்ட அளவு கதர் வாங்க முடிந்தது. நான் நூல் கொடுத்திருப்பது வேஷ்டிகளும் சேலைகளும் நெய்வதற்காகவாகும். துண்டுகள், ஷர்ட்டுகள், போர்வைகள், விரிப்புக்கள் முதலியவற்றிற்கு கதர் வாங்குவது எப்படி? நான் சில நாட்களுக்குமுன் கதர் பந்தருக்குச் சென்று கேட்டேன். அவர்கள் எத்தனை ரூபாய்க்குக் கதர் வேண்டுமோ அத்தனை சிட்டம்நூல் கொடுக்கும்படி சொன்னார்கள், அத்துடன் நான் பந்தரில் ஒரு மெம்பராக இருக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். நான் தினந்தோறும்பஞ்சு கொட்டுவதிலும் நூல் நூற்பதிலும் 2 முதல் 2½ மணி நேரம் செலவு செய்கிறேன். ஒழிந்த நேரத்தையெல்லாம் இந்த வேலையிலேயேசெலவுசெய்கின்றேன். இப்படி எல்லாம் வேலை செய்த போதிலும் என்னுடைய தேவைக்குத் தக்க நூலை நூற்க முடியவில்லை. நான் என்ன செய்வது ? இங்குள்ள பாஷை தெரியாதிருப்பதும் மற்றொரு கஷ்டம். கதர் சம்பந்தமான விதிகளையெல்லாம் ஹிந்துஸ்தானியில் எழுதி மாட்டியிருந்தால் நலமாயிருக்கும். அத்துடன் சிபார்சுயில்லாமல் எதுவும் செய்ய முடியாது என்றும் தோன்றுகிறது. இதைத் துர் அதிர்ஷ்டம் என்று கூறுவதா அல்லது மனித சுபாவம் என்று கூறுவதா ? ராட்டினம் வாங்க வேண்டாம், ஒரு சிறு கதிர் மட்டும் வாங்க வேண்டுமானாலும் சிபார்சு தேவையாயிருக்கின்றது. இந்தச் சிறு சாமான்களை வாங்கக் கூட இப்படிக் கஷ்டப்பட வேண்டியிருப்பதை சர்க்கா சங்கத்தாரே உணர்ந்து கொள்ளவில்லையானால் எங்களுக்குப் புகலிடம் எது ?"

இதைக் குறித்து நான் இங்கே வசித்து வரும் செல்வாக்குள்ள ஒரு குஜராத்தி நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர்க்குக் கோபாவேசம் உண்டாய் விட்டது. " ஆம் காந்திஜி வைஸிராய் ஆகிவிட்டார். அவர் என் பிறர் சொல்லைக் கேட்கிறார். தமக்குத் தோன்றியபடியெல்லாம் செய்கிறார். அப்படியே செய்யட்டும். எங்கு கதர் கிடைக்குமோ அங்கு வாங்கிக் கொள்வோம். அத்தாட்சி பெறாத கதரை ஆதரிப்போம். பியாரேலால்ஜீயோ அவர் தமக்குப் பிடித்த கடிதங்களைமட்டுமே காந்திஜிடம் காட்டுகிறார், மற்றவைகளையெல்லாம் குப்பைப் பெட்டியில் போட்டு விடுகிறார்" என்று அவர் கூறினார்."

இந்த நிருபர் எனக்கு வரும் கடிதங்களைப் பற்றிக் கோபமாகக் குறை கூறியிருக்கிறார். ஆனால் பிரயோசனமான கடிதங்கள் யெல்லாம் என்னிடம் காட்டப் படுகின்றன. வருகிற கடிதங்களை யெல்லாம் நான் வாசிப்பதானால் அதற்கே என்னுடைய நேரம் முழுவதும் செலவாய்ப் போகும், நான் செய்ய வேண்டிய வேலையைச் செய்ய முடியாதவனாகி விடுவேன்.

ஆனால் கதரைப்பற்றிக் கூறியிருப்பது கவனிக்க வேண்டியதே யாகும். கதர்க்கடைகள் புதுத்திட்டத்தின் காரணமாக மறைந்துவிடும் என்பதின் பொருள் யாதெனில் அவைகள் எல்லாக் கதர் உற்பத்தி சம்பந்தமான காரியங்களையும் கற்றுக்கொடுக்கும் ஸ்தாபனங்களாக மாறிவிடவேண்டும் என்பதே யாகும். ஆதலால் பருத்தி, ராட்டினங்கள், கதிர்கள் முதலிய சாதனங்கள் எல்லாம் கதர்க்கடைகளில் கிடைக்கும்படி செய்யவேண்டியது அத்யாவசியமே யாகும். அதற்கும் மேலாகக், கதர் ஊழியர்கள் எப்பொழுதும் மரியாதையாக நடக்கவும் உதவி செய்யவும் வேண்டும். அப்படி யில்லையானால் கதர் இயக்கம் புகைந்தே போகும். அப்படிக் கதர் இயக்கம் அழிந்து போவதற்குக் கதர் ஊழியர்களே காரணஸ்தர்களாக இருப்பார்களானால் அது பெரிய துக்ககரமான விஷயமாகும்.

இந்தக் கடிதத்தில் கண்ட விஷயம் இரண்டொரு கடைகளுக்கே பொருந்தும். அதனால் அத்தகைய கடைகள் எல்லாம் தங்கள் தவறுகளை நீக்கிக் கொள்ள வேண்டும். அவைகளுக்காகவே இந்தக் குறிப்பை எழுதுகின்றேன்.

ஒழுங்காக நூற்பவர்கள் தாங்களே நூற்ற நூலைக் கொடுத்து ரொக்கத்துக்குக் கதர் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு யாதொரு தடையும் இருத்தலாகாது.

சேவாகிராமம் — 6-8-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## குழந்தை கற்பிக்கக் கூடியது

நான் சென்னைக்குப் போயிருந்தபோது நான் நூற்பதை அருணா என்ற ஐந்துவயதுக் குழந்தை பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வளவுதான், அதற்கும் நூற்கவேண்டும் என்ற ஆசை உண்டாய்விட்டது. அவள் பிறந்திருப்பது கதர்ச் சூழ்நிலையுள்ள வீட்டிலாகும். அவளுடைய பெற்றோர் அவளை இதைச் செய் என்று கட்டாயப் படுத்துவது கிடையாது. அவளாகத் தன்னைச் சுற்றி நடப்பவற்றைப் பார்த்து எதைக் கற்றுக்கொள்ள விரும்புகிறாளோ அதைக் கற்றுக்கொள்ளவே விட்டுவிடுகிறார்கள். அந்தக் குழந்தை தானாக நூற்கப் பிரியப்பட்டதும் அவர்கள் அதை ஆதரித்தார்கள். அதனால் ஒருநாள் முழுவதும் வேலை செய்து ஒரு பஞ்சுத்திரி தயாரித்து என்னிடம் கொடுத்து நூற்கச் சொன்னாள். அப்பொழுது அவள் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே கிடையாது. நான் அவளிடம் அவள் தந்த பஞ்சுத் திரியிலுள்ள குறைகளை விளக்கிச் சொன்னேன். அந்தக் குறைகளை நீக்க அவளுடைய பெற்றோரும் அவளுக்குச் சகலவித உதவிகளும் செய்தார்கள். அதுமுதல் அவள் ஒழுங்காகப் பஞ்சுத்திரி செய்தல், தான் தயாரிக்கும் பொருளைப் பிறர்க்குக் கொடுத்தல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஏககாலத்தில் கற்றுக் கொண்டாள். குழந்தைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து பணத்தை வாங்கிப் பிறர்க்குக் கொடுப்பது வழக்கம். ஆனால் அந்தமாதிரிக் கொடுப்பதிலுள்ள பெருமை எல்லாம் பெற்றோரையே சாரும். குழந்தை தானாக வேலை செய்து உண்டாக்கிய பொருளைப் பிறர்க்குக் கொடுப்பது என்பது வேறு விஷயம். அதைவிட உயர்ந்த தானம் உலகத்தில் உண்டோ?

சேவா கிராமம் — 9-8-46 — மோ. க. காந்தி.

(ஹரிஜன பந்துவிலிருந்து)

## வாரக் கடிதம்

ஒரு நண்பர் காந்தியடிகளிடம் கூறினார் :—

"காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியாரோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதைப் பற்றி நான் ஆட்சேபிக்க வில்லை. ஆனால் அது வெற்றி பெறாவிட்டால் என்ன செய்யப்போகிறீர்கள்? பிரிட்டிஷ் சர்க்கார் தயாராக இருக்கிறார்கள். ஆனால் நாம் அப்படி யில்லை. மறுபடியும் போர் தொடுக்காமல் நாம் சுயராஜ்யம் அடைய முடியாது என்பது என்னுடைய நம்பிக்கை. உங்களுக்கும் புரட்சி மனப்பான்மை உண்டென்பதை அறிவேன். உங்களைப் போலவே எனக்கும் ஹிம்சையில் பிரியம் கிடையாது. அது கெட்டது. என்னுடைய லட்சியமும் உங்களுடையதைப் போன்றதுதான். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நிச்சயமாகச் சுதந்திரம் அடைந்து விடக் கூடிய அஹிம்ஸா மார்க்கத்தைக் காட்டுங்கள். நான் உங்களைப் பின் தொடர்ந்து வருவேன். எனக்கும் அஹிம்ஸையில் நம்பிக்கை உண்டு. ஆனால் 1932-ம் வருஷத்துப் போராட்டம் போதாது. போராட்டம் ஆரம்பித்ததும் தலைவர்களைச் சிறையிலிட்டு அவர்களுக்கும் ஜனங்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் செய்து விடுகிறார்கள். தலைவர்கள் சிறையில் கஷ்டமில்லாமல் இருக்க ஜனங்கள்வெளியில் கஷ்டப்பட வேண்டி யிருக்கிறது. அப்படிக்கின்றித் தலைவர்களே கஷ்டத்தை அனுபவிக்கும்படியான போராட்டம் ஆரம்பிக்கவேண்டும். தங்கள் தலைமையில் நூறு முதல்தரமான காங்கிரஸ் தலைவர்கள் சர்க்காருக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு ஒருவர்பின் ஒருவராக மரண பரியந்தம் உண்ணாவிரதம் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால் எல்லோரும் உண்ணாவிரதம் இருந்து இறப்பதற்கு முன்னதாகவே இந்தியா சுயராஜ்யம் அடைந்துவிடும். இதைத் தாங்கள் ஆரம்பித்தால் நானும் அதில் சேர்ந்து கொள்கிறேன். நூற்றுக் கணக்கான காங்கிரஸ்காரர்கள் சுடப்பட்டும் அடிபட்டும் இறந்தபோதிலும் ஜெயராம்தாஸ் தௌலத்ராம் என்னும் காங்கிரஸ் தலைவர் தவிர வேறு யாரும் குண்டு வாங்கியதில்லை யல்லவா?"

காந்தியடிகள் கூறிய பதில் :—

"உண்ணாவிரதம் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது மற்றவர்கள் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் நான் உண்ணாவிரதம் இருப்பேன். மரணம் வரை உண்ணாவிரதம் இருப்பதென்பது சத்தியாகிரக ஆயுத சாலையில் கடைசியாக உபயோகிக்கவேண்டியதும் இணையற்ற ஆற்றலுடையதுமான ஆயுதமாகும். அது புனிதமான விஷயம். ஆனால் அதற்குரிய நிபந்தனைகளுடன்தான் அதை உபயோகிக்கவேண்டும். உண்ணாவிரதமன்று முக்கிய விஷயம், அது எதைக் குறிக்கிறதோ அதுதான் முக்கியமான விஷயம். வேஷதாரிகள்கூட உண்ணாவிரதம் இருப்பதாக ஏமாற்றுவது உண்டல்லவா? அத்தகைய உண்ணாவிரதங்கள் பிளேக் போன்ற தொத்து வியாதியாகும். அவைகளால் எந்தவிதமான பயனும் உண்டாகாது. என்னோடு 100 பேர் வேண்டாம் 10 பேர் ஆனாலும் தூய்மையான இதயத்தோடு உண்ணாவிரதமிருக்கத் தயாராயிருந்தால் நான் பரம சந்தோஷமடைவேன். ஆனால் அத்தகைய உண்ணாவிரதத்தைச் சிறையிலிருக்கும்போது ஆரம்பிக்கக்கூடாது."

நண்பர் கூறியது :—

"நான் கூறுவது யாதெனில் சிறைக்குப் போவது போதாதென்பதே ஆகும். வெளியிலிருந்துகொண்டு அடக்குமுறைக்கு ஆளாகவேண்டும். பாட்னா நகரத்தில் சர்க்கார் காரியாலயத்திற்குமுன் 9 இளைஞர்கள் குண்டுகளைத் தாங்கி இறந்தார்கள். இந்த இளைஞர்

களுக்குப் பதிலாக ராஜேந்திரபாபு இப்படி இறந்திருந்தால் ஜனங்களுக்கு எவ்வளவு அதிகமான வீரமும் தீரமும் உண்டாயிருக்கும்."

காந்தியடிகள் :—

"ஆம், சிறைச்சாலைக்குப் போவது மட்டுமே போதாது. தூய்மையான உள்ளம் உள்ளவர்கள் சிறைக்குச் சென்றால் மட்டுமே சுயராஜ்யம் சித்தியாகும். அதனால்தான் 1922ல் நான் சிறைக்குச் சென்றால், மற்றவர்கள் சிறைக்கு வராமல் நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லியிருந்தேன். 18 அம்சம் பொருந்திய நிர்மாணத் திட்டத்தை பரிபூரணமாக நிறைவேற்றி வைத்தால் சாத்வீகச் சட்ட மறுப்புக்கு அவசியமேயில்லை. 1922-ல் பர்தோலி வாசிகள் நிர்மாணத் திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றி வைப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்றுவரை அப்படிச் செய்யவில்லை.

நண்பர் :—

"சிறைக்குச் செல்வதால்மட்டும் காரியசித்தி ஆகாது என்று சொல்லுகிறீர்கள். நாங்கள் அரசியல் கைதிகளை ஏ. பி. ஸி. என்று பிரிப்பதை ஒழிக்க விரும்பினோம். எல்லோரும் ஸி. வகுப்பு மாதிரி நாமாகவே நம்முடைய சுகங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டுமென்று யோசனை சொன்னோம். அப்படிச் செய்யக் கூடாதென்று நீங்கள் சொல்வதாகச் சிலர் சொன்னார்கள்."

காந்தியடிகள் :—

"அது கொஞ்சமும் சரியில்லை. அரசியல் கைதிகள், அரசியல் அல்லாத கைதிகள் என்று பிரிப்பதைக்கூட நான் விரும்பவில்லை. எல்லாக் கைதிகளையுமே மனிதப் பண்புடன் நடத்த வேண்டுமென்றே விரும்புகிறேன். ஆனால் என்னைத் தவிர வேறு யாரும் இப்படிச் சொல்லவில்லை. அதிகாரம் நம்மிடத்தில் இருந்த போது கூட நாம் இதை மாற்றத் தவறிவிட்டோம். நான் தான் சத்தியாகிரகிகளைச் சிறைக்குச் செல்லச் சொன்னேன். சிறை செல்வதன் அஸ்திவாரம் அஹிம்சை. அஹிம்சையும் சௌகரியமும் முரண்பட்டவை. நான் சிறையிலிருந்துகொண்டே சர்க்காரை எதிர்த்திருக்கிறேன். இப்பொழுது எல்லாவிதமான ஜனங்களும் சிறைக்குச் செல்கிறார்கள். சிறைக்குள் எப்படியெல்லாமோ நடக்கிறார்கள். மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வந்துவிடக் கூடச் செய்கிறார்கள். சிறைக்குச் செல்வது வெறும் நாடகமாக ஆகிவிட்டது."

வேலை நிறுத்த ஜுரம்

சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் பிரதம மந்திரி ஒருவர் தற்சமயத்தில் நாட்டில் காணப்படும் வேலை நிறுத்த ஜுரத்தைப் பற்றி காந்தியடிகளிடம் பேசிக்கொண்டிருந்தார். குறிப்பிட்ட ஒரு வேலை நிறுத்தம் அகாரணமாக நீடித்து நடப்பதைக் குறித்து வருத்தப்பட்டார்.

காந்தியடிகள் :—

"அப்படியானால் ஜனங்களிடம் தனக்குள்ள செல்வாக்கைக் காங்கிரஸ் இழந்து விட்டது என்று கூறுகிறீர்களா ?"

பிரதமர் :—

"அப்படியில்லை. காங்கிரஸ் ஏகமனதாக இதைப் பற்றி அபிப்பிராயம் கூறவில்லை. அதனால்தான் பொது ஜனங்களுடைய மனத்தில் குழப்பம் உண்டாயிருக்கிறது."

காந்தியடிகள் :—

"வேலை நிறுத்தம் செய்வதற்கு நியாயம் இல்லை என்றால் அதை ஐயமறக் கண்டிக்க வேண்டியது அவசியமாகும்."

பிரதமர் :—

"கண்டிக்க வேண்டியது யார் ?"

காந்தியடிகள் ,—

"காங்கிரஸ் தான் ?"

பிரதமர் :—

"காங்கிரஸ் என்றால் காரியக் கமிட்டிதானே. அது அப்படிச் செய்யவில்லையே."

காந்தியடிகள் :—

"காங்கிரஸ் என்பதற்கு அர்த்தம் காரியக் கமிட்டி மூலம் பேசும் நாற்பது கோடி இந்திய மக்கள் என்பதாகும்"

இந்தச் சமயத்தில், பெண்களுக்கு உரிமை வேண்டுமென்று போராடும் கட்சியைச் சேர்ந்த ஒரு பெண் கூறினாள் :—"ஆனால் காரியக் கமிட்டி முன் போல் ஏகமனதாக அபிப்பிராயம் கூறுவதில்லையே. அந்த மாதிரி நீங்கள் அதில் ஆட்களைச் சேர்த்து வைத்து தேசத்தின் தலையில் சுமத்தி விட்டீர்கள். ஜனநாயகத்தின் வாயை அடைத்து விட்டீர்கள்."

"இப்பொழுதுள்ள காரியக் கமிட்டியை நான் அமைக்கவில்லை. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் தலைவர்தான் அமைத்திருக்கிறார். நான் அவரிடம் கூறியதெல்லாம் பழைய சம்பிரதாயத்தையோ பெரிய தலைவர்கள் என்ற எண்ணத்தையோ மனத்தில் வைத்துக் கொள்ளாமல் காரியக் கமிட்டியை அமைக்க வேண்டும் என்பதேயாகும். இப்பொழுதுள்ள காரியக் கமிட்டி ஜனநாயகத்திற்கு விரோதமாயிருந்தால் ஒரு நாள் கூட நிலைத்திருக்க மாட்டாது. அதற்கு ஒரே ஒரு நிபந்தனை யாதெனில் ஜனங்கள் கவனமாகக் கண்காணித்து வருவதேயாகும். உதாரணமாக சர்ச்சிலைப் பாருங்கள். ஜனங்களுடைய மனத்தை என்று அவர் பிரதிபலிக்கவில்லையோ அன்று அவருடைய சேவையையும் திறமையையும் கவனியாமல் அவரை விலக்கி விட்டார்கள். ஜனநாயக சரித்திரத்தில் தொழிற்கட்சி இவ்வளவு அமோகமான வெற்றியுடன் அதிகாரத்திற்கு வந்தது ஒரு பெரிய விஷயமாகும். அது காட்டும் படிப்பினையை நாம் இதயத்தில் ஏற்று உபயோகித்துக் கொள்ள வேண்டும்."

அப்பொழுது ஒருவர் "இந்த வேலை நிறுத்தங்களுக்கு அரசியல் காரணங்கள் உண்டோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் என்ன செய்வது ?" என்று கேட்டார்.

காந்தியடிகள் :—

"வேலை நிறுத்தம் செய்தவரிடம் விஷயத்தை விளக்குங்கள். அபாயத்தைப் பற்றிச் சொல்லுங்கள். அவர்களோ ஜனங்களோ செவி சாய்க்காவிட்டால் ராஜிநாமா செய்யுங்கள்."

நண்பர் :—

"அப்படிச் செய்தால், காங்கிரஸ் ராஜிநாமா செய்ய வேண்டும் என்றும் குழப்பம் உண்டாக்க வேண்டும் என்றும் எண்ணி இந்தக் காரியங்களைச் செய்பவர்களுக்கு இடங் கொடுப்பதாக ஆகிவிடாதா ?"

காந்தியடிகள் :—

"அதுதான் ஜனநாயக முறை. அது ஜனங்களுக்கு விஷயத்தைக் கூறும். ஜனங்களுடைய ஆதரவில்லாவிட்டால் விஷமிகளுடைய செல்வாக்கு அழிந்து போகும். காங்கிரஸ் பலாத்காரத்தைக் கொண்டு ஆட்சியை நடத்தாது என்றுமட்டும் ஜனங்கள் உணர்ந்து கொண்டால் அவர்கள் எதையும் யோசியாமல் செய்வதை நிறுத்திக் கொள்வார்கள். விஷமிகள் எதையும் செய்ய முடியாதவர்களாக ஆகி விடுவார்கள்.

**கொஞ்சமேனும் ஓய்வு வேண்டாமா?**

காந்தியடிகள் உருளியிலிருந்து புறப்படுமுன்—"சேவா கிராமத்திலாவது ஓய்வு கிடைக்குமோ? பார்ப்போம். வேலை மிகுதியன்று என்னைக் கஷ்டப்படுத்துவது, பற்று இல்லாம லிருக்க முடியவில்லையே, அதுதான் கஷ்டப்படுத்துகிறது. எல்லாவற்றையும் கடவுளிடம விட்டுவிட .இன்னும் நான் கற்றுக்கொள்ள வில்லை. கடவுளிடம் பரிபூரணமாக நம்பிக்கை இருக்குமானால் இதைப் பற்றிக் கூட நான் கவலைப்பட லாகாதல்லவா ?" என்று கூறினார்,

சேவா கிராமத்துக்கு வந்த பிறகும் அவருக்கு ஓய்வு கிடைக்க வில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்ற படியால் நாள் முழுவதும் ஜனங்கள் வந்த வண்ணமாக இருந்தார்கள். அவருடைய குடிலைச் சுற்றிச் சூழ்ந்து வந்தபடியால் அவர் தம்முடைய வாசலில் ஒரு திரையைத் தொங்கவிட்டுக் கொண்டு வேலை செய்தார்.

சேவா கிராமம் வந்து சேர்ந்த தினத்தன்று மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

"இப்பொழுது ஆச்சிரமவாசிகள் ஒவ்வொருவரும் தாம் இன்று நூற்ற நூல் இவ்வளவு என்று கூறியதைக் கேட்டீர்கள். உங்களில் எத்தனை பேர் இன்று நூற்றீர்கள் என்று கேட்டால் வெகு சிலரே கையைத் தூக்குவீர்கள். இங்கு ஆச்சிரமத்தில் நூல் நூற்றல் பிரார்த்தனையில் ஒரு அம்சமாக ஆகியிருக்கிறது. நூல் நூற்றலே ஏழைகளின் கதிமோட்சம் தருவது என்று நம்புவதால் அதை ஒரு யக்ஞமாக மதித்து பிரார்த்தனையில் சேர்க்கப் பட்டிருக்கிறது. ராட்டினத்தின் மூலம் ஜீவனம் தேட முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். ஆனால் கிராமவாசிகள் தங்களுக்கு உடைகளுக்காக வேண்டிய நூலை வெகு எளிதில் நூற்றுவிட முடியும். அவர்கள் உடை விஷயத்தில் சுய உதவித் தத்துவத்தை உணர்ந்து கொள்ளாததால் தான் பிற விஷயங்களிலும் அந்தத் தத்துவத்தை உணர்ந்து கொள்ளவில்லை. அது விவசாயத்தைக் கூடப் பாதித்திருக்கின்றது. அதனாலேயே நிலவளமிருந்தும் பஞ்சம் உண்டாயிருக்கின்றது. உணவுப் பொருட்கள் உண்டாக்குவதற்கு வேண்டிய நல்ல நிலம் ஏராளமாக இருக்கின்றது. ஆனால் அதைப் பயன் படுத்தாமல் இருக்கின்றோம். நாம் புத்தம் புதிய உணவுகளை அப்படியே உண்ணாமல் கெடுத்துவிட்டே உண்ணுகினறோம். தான்யங்களை உற்பத்தி செய்து பிறகு அதை வெறும் தூசியாகச் செய்து சாப்பிடுகிறோம், கடவுள் நமக்கு வேண்டியதை யெல்லாம் அளித்திருக்கிறார். அறிவையும் கைகளை உபயோகிக்கும் ஆற்றலையும் கொடுத்திருக்கிறார். உணவை உண்டாக்கலாம். பருத்தியை விளைவித்து உடை உண்டாக்கலாம். ஆடு மாடுகளை வளர்த்துக் குழந்தைகளுக்கு பால் ஊட்டலாம். ஆனால் நாம் இதெல்லாம் செய்யாமல் பட்டினியாயும் அம்மணமாயும் இருந்துவருகிறோம். நம்முடைய குழந்தைகள் போதுமான போஷணை பெறுவதில்லை. இதைவிடத் துக்ககரமான விஷயம் வேறு ஏதேனும் இருக்கமுடியுமோ ?

வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டியவற்றை யெல்லாம் கிராமவாசிகள் தங்கள் கிராமங்களிலேயே உற்பத்திசெய்து கொள்ளமுடியும். ஆனால் நகரங்கள் அப்படிச் செய்யமுடியாது. அவைகள் கிராமங்களின் உதவியின்றி உணவும் உண்டாக்கமுடியாது, உடைக்கு வேண்டிய பருத்தியும் விளைவிக்கமுடியாது, ஆடு மாடுகள் வளர்க்கவும் முடியாது. ஆனாலும் இந்தியாவல் எந்தக் கிராமமும் இப்பொழுது தனக்கு வேண்டியதை யெல்லாம் தானே செய்து கொள்ளக் காணோம். சேவா கிராமம் அப்படிச் செய்து கொள்ள முடியும், ஆனால் அதுவும் இன்னும் அப்படிச் செய்ய வில்லை. நம்முடைய கிராமவாசிகள் சோம்பலாக இருந்து கொண்டு சூது விளையாட்டு முதலியவைகளில் தங்கள் நேரத்தைப் பாழாக்குகிறார்கள். நீங்கள் ராட்டினத்தைக் கைக் கொள்ளாமல் நிலத்தை மட்டுமே நம்பி யிருந்தால், அது சாத்தியமில்லை என்பதை வெகு சீக்கிரத்தில் கண்டு கொள்வீர்கள். ஆனால் ராட்டினத்தைக் கைக் கொண்டால் உங்கள் சோம்பல் போகும், அதனால், உங்கள் விவசாயமும் செழித்து வளரும்.

இன்று அநேகர் என்னுடைய குடிலைச் சுற்றி வந்து எனக்கு நிரம்பக் கஷ்டம் கொடுத்து விட்டார்கள். என்னால் பொறுக்க முடியாமல் ஆய்விட்டது. அப்படி நடந்து கொள்வது அவர்கட்கும் நன்மைதராது எனக்கும் நன்மை தராது. உண்மையான போற்றல் என்பது யாது? யாரைப் போற்றுகிறோமோ அவருடைய விருப்பப்படி நடப்பதே யன்றி அவரைப் பார்க்க விரும்பி அவருடைய நேரத்தையும் தம்முடைய நேரத்தையும் வீணாக்குவது அன்று."

**ஒரு முக்கியமான முடிவு**

வார்தாவி லுள்ள சேக்ஸாரியா கலாசாலைத் தலைவர் திரு நாராயண அகர்வாலும் கமிட்டியாரும் தங்கள் கலாசாலையில் சகல பாடங்களையும் மராத்தி பாஷையிலேயே கற்பிக்க முடிவு செய்திருப்பது கல்விச் சீர்திருத்த விஷயத்தில் ஒருபடி முன்னேறியதாகும். இதற்காக 9-ம் தேதி ஒரு விழா நடத்தினார்கள். பிரதம மந்திரியும் இதர மந்திரிகளும் நாகபுரி சர்வகலாசாலை உப அத்யட்சரும் பிரசன்னமா யிருந்தார்கள். அப்பொழுது பிரதம மந்திரி கூறியதாவது :—

"காங்கிரஸ் மந்திரிசபை 1940-ல் ராஜிநாமாச் செய்யுமுன் இது விஷயமாகப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தப் பட்டது. அது சாதகமாக அறிக்கை எழுதியது. ஆனால் ஆலோசனையாளருடைய ஆட்சியில் அது மறைந்து போய்விட்டது. இப்பொழுது காங்கிரஸ் மந்திரிசபை மறுபடியும் அதை எடுத்துப் பரிசீலனை செய்துகொண் டிருக்கிறது."

சர்வகலாசாலை உப அத்யட்சர் "1949-ம் வருஷத்துக்குள் சர்வகலாசாலைப் படிப்பை யெல்லாம் தாய் பாஷையில் கற்பிக்க ஆரம்பித்து விடுவோம்" என்று கூறினார்.

**சுதந்திரத்தின் அஸ்திவாரம்**

அந்த விழாவுக்கு வந்த கூட்டம் சரியாக நடந்து கொள்ளவில்லை. ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து விட்டார்கள். அதைக் குறித்துக் காந்தியடிகள் கூறியதாவது :—

"இந்த மாதிரி நடந்துகொண்டது சுதந்திரம் பெறுவதற்கேற்ற மார்க்கமாகத் தோன்றவில்லை. காங்கிரஸ் காரியக் கமிட்டியார் உங்கள் ஊரில் கூடி எவ்வளவு சீக்கிரத்தில்சுதந்திரம் பெறமுடியும்என்பது குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குச் சுதந்திரத்தில விருப்பமிருந்தால் நீங்கள் முதலில் கட்டுப்பாட்டுடன் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்களாக அப்படி நடந்துகொள்ளா விட்டால் அதிகாரிகளைக்கொண்டு அப்படி நடந்து கொள்ளும்படி செய்யவேண்டி யிருக்கும். ஆனால் அது சுதந்திரமாகாது, அடிமைத்தனமே யாகும். நீங்கள் அக்கிரமச் செயல்களில் இறங்கினால் சர்க்காரும் சட்டம் ஒழுங்கு என்று சொல்லிக்கொண்டு அக்கிரமச் செயல்களில இறங்கும். ஜனங்கள் ஒழுங்காக நடந்தால்தான் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஜனங்களுடைய உண்மையான ஊழியர்களாக ஆவார்கள். இல்லையானால் உங்களுடைய முதுகில் சவாரிதான் செய்வார்கள். போயர் யுத்த சமயத்தில் ஒரு பட்டாளம் இருட்டில் நிசப்தமாகச் சென்றதைப் பார்த்திருக்கிறேன். அதைவிட அதிகமான கட்டுப்பாடு வேண்டுமல்லவா சுயராஜ்யம் பெறுவதற்காக அணிவகுத்துச் செல்லும் நம்முடைய சேனைக்கு? அதில்லாமல் பூலோக சொர்க்கம் என்னும் ராமராஜ்யம் வெறும் கனவாகவேதான் இருக்கும்."

சேவாகிராமம் — 11-8-46 — பியாரேலால்.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ௪௬, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை 17.